அதோடு கூட ஹௌசிங் ஸ்கீம் என்று சொல்லப்பட்டிருப்பதையும் பார்க்க வேண்டும். அப்படி ஹௌசிங் ஸ்கீம் என்று சொல்லும் போதே அந்த நிலம் ஹௌசிங் சைட்டாக மதிப்பு இருக்கிறது என்று ஏற்பட்டுவிடுகிறது. அதனாலே இப்போது என்ன பொட்டலாக இருந்தாலும் அதை அக்வயர் செய்யும்போது அது ஹௌசிங் சைட் மதிப்பு என்றாகிவிடுகிறது. "Suitable for house site" என்று டவுனை ஒட்டி எடுத்துக் கொள்ளப் படும் நிலங்களை குறிப்பிட்டுத்தான் இந்த மசோதா செய்யப்படுகிறது. இன்றைக்கு இந்த மசோதாவினுடைய நோக்கம் நியாயமான விலையிலிருந்து குறைத்து எடுத்துக் கொள்வதாக தான் தெரிகிறதே தவிர, வேறு வகையிலே நிலச்சுவான்தாருக்கு நியாயமான அனுகூலம் செய்யக் கூடிய முறையிலே இது அமையவில்லை. அப்படி அதற்கு ஹௌசிங் ஸ்கீம் என்ற பெயர் கொடுக்கவில்லை யென்றால், அது வெறும் பொட்டலாகத் தான் இருக்கும். இந்த வெறும் பெயர் தான் அதற்கு அந்த மதிப்பை கொடுக்கிறது என்று சொல்லக் கூடாது. இப்படி வீடு கட்டாமல் வைத்து இருந்தாலும் ஒரு அகஸ்மாத்தாய் கிடைக்கக் கூடிய அனுகூலத்தை சுவான் தாரர் சலுகையாக வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும். அந்த நிலைமைக்குப் போக இன்றுள்ள சட்டம் உதவுகிறதா என்று பார்க்க வேண்டும். நியாயமாக கிடைக்கும் அனுகூலத்தையும் விலை மதிப்பையும் குறைக்கும்படியான, ஒரு முறையாக இந்த சட்டம் அமைந்து விடக் கூடாது.

இன்றுள்ள நிலைமையிலே சட்டத்தைப் பார்த்தால் அந்த ரூலிங்களை "ஓவர்ரைட்" செய்யக்கூடிய முறையில் தான் இருக்கிறது. "to get over present rulings" என்ற முறையிலே தான் இருக்கிறது. இங்குள்ள இரண்டொரு ரூல்களைப் படித்துக் கொண்டு என்னுடைய பேச்சை நிறுத்திக் கொள்கிறேன். பல சட்டங்களை எடுத்துக் கொண்டால் அவைகளுக்கு எதிர்விரோதமாக இப்போது இந்த மாறுதல்கள கொண்டு வரப்பட்டிருக்கிறது தெரிகிறது. சட்டங்களை மட்டும் எடுத்துக் கொண்டால்

'In considering what is the fair market value of the land, it is right to take into account not only the use to which the land is being put at the time of the acquisition but its market value if laid out in the most advantageous way in which the owners could dispose of it. When it has a potential value which is not merely speculative, it ought to be taken into consideration.'

என்றிருக்கிறது: அதே போன்று இன்னொரு ரூலிங் இருக்கிறது:

'Land should not be valued merely with reference to its present use or the income at present derivable but potentiality also should be taken into account.'

என்றிருக்கிறது. இதைத் தவிர சென்னை சம்பந்தமாக இன்னொரு ரூலிங் இருக்கிறது:

'Not only the present purpose to which the land is applied but also any other more beneficial purpose, to which in the course of events it might, within a reasonable time, be applied.'

'The special adaptability of land for building purposes is an element to be taken into account in fixing compensation.'

என்று 1953-வது ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தில் இருக்கிறது. இதைத் தவிர,

'The special adaptability of a land to a particular purpose cannot be ignored in fixing market value.'

இது போன்று பல சட்டங்களை எடுத்துக் கொண்டு பார்த்தால், அவைகளில் பொருத்தமிருக்கிறதா என்று யோசிக்க வேண்டும். சரியாக பிரயோகிக்கப்படாவிட்டால், மாறாக விலையைக் குறைத்து விட முடியாது. அது என்ன காரணத்தினால் என்று யோசிக்க வேண்டும். சட்டத்தின் மூலம் முக்கியமாக ஹௌசிங் சைட் போன்றவைகளின் விலையைக் குறைத்து விடக்கூடாது. "If it is done with a good conscience" என்ற புதிய சப்-கிளாஸ், இந்த ரூலிங்களை ஓவர்ரைட் செய்வதாக இருக்கிறது. ராஜ்யங்கள் எது ரீசனபிள் காம்பன்சேஷன் அடிப்படை என்பதை நிர்ணயித்து விதிகளை விதித்துக் கொள்ளலாம் என்று அரசியல் சட்டத்தில் சொல்லியிருக்கிறதே தவிர நியாயமான கன்சிடரேஷன்களை காம்பன்சேஷன் நிர்ணயிக்கும் போது கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று செய்வதானது ஜீவாதார உரிமைகளை பாதிப்பதாகும். அப்படி விதிகளை விதித்துக்கொள்ளும் போது நாம் அவர்களுக்கு நியாயமான முறையிலே காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும். இப்படி இல்லாவிட்டால் இந்த இரண்டும் ஓரளவு பாதிக்கக் கூடியதாகத்தான் இருக்கும். ஆகவே இரண்டு திருத்தங்களையும் நன்கு பரிசீலிக்க வேண்டும். அப்படி இந்தத் திருத்தங்களைப் பரிசீலிக்காவிட்டால் அதனால் பல ஏழைகள், பல நடுத்தர வர்க்கத்தினர்கூட பாதிக்கப்படலாம், மனதிலே பணக்காரர்களுக்கு லாபம் சம்பாதிக்கக் கூடிய தடுக்க வேண்டிய அவசியத்தை மட்டும் வைத்துக்கொண்டு செய்யாமல், அதே சமயத்திலே நடுத்தர வர்க்கத்தினர்கூட பெருமளவு பாதிக்கப்படாதபடி இவைகளைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

29th March 1961]

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவில் இருக்கக் கூடிய கருத்தை நான் ஆட்சே பிக்க முடியாது. ஆதரிக்கக்கூட கடமைப்பட்டவன். ஏனென்றால், நகரத் தின் அபிவிருத்தி ஏற்படும் காரணத்தினாலே, நிலத்தினுடைய மதிப்பு உயரக் கூடிய சமயத்தில் அந்த மதிப்பை ஒரு சிலர் நியாயமாக அடைவ தோடு மட்டுமல்லாமல், அக்கிரமமாக அடைவதற்கும் முயற்சி செய்கிறார்கள். அதைத் தடுப்பது நியாயமானது. பொது உபயோகத்திற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு அதற்கு சரியான விலை நிர்ணயிக்கப்பட வேண்டு மென்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை நான் ஆதரிக்கின்றேன். ஆனால் இப்போது இந்தத் திருத்தங்களில் கொடுக்கப்பட்டிருக்கிற விதி களைச் சரியாக புரிந்து கொண்டு விலை நிர்ணயிக்கப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அதுவும் இப்போது திருத்தங்கள் செய்யப்பட்டு, விதிகள் பிறப்பிக்கப்படுவது என்ற நிலையில் இருக்கிறது. அப்படிப் பிறப்பிக்கப்படும் உத்திரவுகள் சரியான உத்திரவா, சமீபத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவு எது என்று கூட அதிகாரிகளுக்குத் தெரியாத முறையில்தான் திருத்தங்கள் இன்றைக்குத் துண்டு துண்டுப் பிரசுரங்களாகக் கொடுக்கப் படுகின்றன. இது மத்திய சட்டத்திற்கு நாம் செய்யக்கூடிய திருத்தங்கள். ஆகவே மத்திய சட்டத்தின்படியே வைத்து, அதோடு நாம் திருத்தக் கூடிய திருத்தங்களைச் சேர்த்து ஒட்டுமொத்தமாக சட்டத்தைத் தொகுத்து பிரசுரிக்க வேண்டியது அவசியம். அப்போது தான் ரெவின்யூ இலாகா அதிகாரிகளும், மற்றவர்களும், பொது மக்களும் புரிந்துகொண்டு அதன் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு முடியுமென்பதை நான் இந்த சபையிலே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

பிறகு, நிலத்தின் மதிப்பை நிர்ணயிப்பதிலே மார்க்கட் வால்யூ இருக்க வேண்டும். ஐந்து வருஷங்களுடைய சராசரி இருக்க வேண்டும் என் றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் நான் சொல்வேன், நாம் யாருடைய நிலத்தை எடுக்கிறோம் என்பதைப் பார்த்து நிர்ணயிக்க வேண்டும். அப்படி நிர்ணயிப்பதிலே தவறு ஒன்றுமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். அதுதான் சரி. யார் 200, 300 எக்கர் நிலத்தைச் சேர்த்து வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு விலையைக் குறைக்க வேண்டும். அரசியல் வட்டாரத்திலே சில விஷயம் தெரிந்தவர்கள் இப்படி நிலங்களைச் சேர்த்து வைத்துக்கொண்டிருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். பெயரை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். முன் கூட்டியே ஸ்பெகு லேஷன் பேரில் நிலத்தை வாங்கி வைத்துக்கொண்டு, கொள்ளை லாபம் அடிப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளவர்களுக்கு இந்த ஐந்து வருஷ சராசரி கூட கொடுக்கக்கூடாது என்று நான் சொல்வேன். அப்படி வாங்கியுள்ளவர்களுக்கு அவர்கள் என்ன விலைக்கு வாங்கினார்களோ, அந்த தொகையையும், அதற்கான வட்டித் தொகையையும் வேண்டு மானால் சேர்த்துக் கொடுக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் அந்த வட்டித் தொகைகூட கொடுக்கக் கூடாது என்று நான் சொல்வேன். அதிலே வரக்கூடிய லாபம் உண்மையிலேயே யாருக்குப் போய்ச் சேர வேண்டுமென்றால், யார் யார் அந்த நிலத்தை அவருக்கு விற்றார் களோ, அந்த நிலச் சொந்தக்காரர்களுக்குப் போய்ச் சேரவேண்டும். ஸ்பெகுலேஷன் பேரில் இதை ஒரு வியாபார எண்ணத்தோடு நிலத்தை வாங்கி சேகரித்து வைத்திருக்கக் கூடியவர்களுக்கு எந்த விதமான அனு கூலமும் கிடைக்கக் கூடாத முறையில் சட்டத்தை ஓரளவு திருத்துவது அவசியமென்று நான் கருதுகிறேன். இந்த மாதிரி சட்டத்தைத் திருத்தி, நஷ்ட ஈட்டை நிர்ணயிப்பதில் சிக்கல் இல்லாமல் செய்ய வேண்டும். குறைந்த நிலம் வைத்திருக்கக் கூடியவர்களை பாதிக்காத முறையில் சட்டம் இருக்கவேண்டியது அவசியம். அவர்களுக்கு அதற்குத் தகுந்த முறையில் மதிப்பிட்டு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். அந்த முறையிலே இந்த விதியைத் திருத்தி யமைக்க வேண்டியது அவசியம் என்பது என் னுடைய அபிப்பிராயம்.

இப்பொழுது கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்தமானது நகரப்புறத் திலும், நகரத்தைச் சுற்றியிருக்கக்கூடிய இடத்திலும் இருக்கக்கூடிய திட் டங்களைப் பொருத்ததாக மட்டும் இருக்கிறது. கிராமப்புறத்திலே வீடு

கட்டும் திட்டங்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுப்பது யார்? குறிப்பாக ஹரிஜனங்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுப்பதிலே விலை உயர்ந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்யக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மேட்டுக்காடு, புஞ்சை நிலங்கள் இவைகளைத் தான் வாங்கிக் கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் வாங்கக்கூடாது என்று ஹரிஜன நல இலாகாவினர் வாதாடுகிறார்கள். குடியிருப்புக்கு தேவையான நிலம் அவர்களுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும். நகரங்களுக்கு உள்ளே கூட ஹரிஜனங்கள் முன்பு வசித்த இடம் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நகரத்தை விஸ்தரித்துக்கொண்டு போகக்கூடிய காரணத்தினால் ஹரிஜனங்கள் வசிக்கக்கூடிய பகுதிகளில் நகர மத்தியிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் புதிய வீடுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அபிவிருத்தி என்ற பெயரால் ஹரிஜனங்களை அங்கே வசிக்க அனுமதிக்க முடியாது என்று சொல்லி, வெளியே அனுப்பிவிடுவோம் என்று சொன்னால், நாங்கள் அதைக் கட்டாயம் எதிர்க்கத் தான் எதிர்ப்போம். நேற்று கூட நிதி அமைச்சர் அவர்கள் கொஞ்சம் மிரட்டிப் பேசினார். அந்த மிரட்டலுக்கெல்லாம் கம்யூனிஸ்டு கட்சி பணிந்து விடாது. சேலத்தில் லீ பஸாரில் வியாபாரிகள் சங்கம் ஒரு தனிப்பட்ட மார்கெட் நடத்துகிறார்கள். அவர்கள் முனிசிபாலிடிக்கு காலணாகூட கொடுப்பதில்லை. அப்பேர்ப்பட்டவர்களுக்கு சர்க்கார் புறம்போக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுக்கிறார்கள். அதற்கு என்ன விலை மதிப்பு போடுகிறார்கள்? ஹரிஜனங்களுக்கு இடம் ஆர்ஜிதம் செய்து கொடுப்பதென்றால் விலை அதிகமாக வாங்கிக்கொடுக்க முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் மூன்று மைல்களுக்கு அப்பால் தான் போகவேண்டும், அவர்களுக்கு அங்கு தான் நிலம் வாங்கிக்கொடுக்க முடியும் என்று சொன்னால், அதற்கு கம்யூனிஸ்ட் கட்சி ஒரு போதும் இணங்காது. அரசியல் காரணங்களைக் காட்டி மிரட்டவேண்டாம். கம்யூனிஸ்டு கட்சி சார்பிலே சொல்லுகிறேன், அப்பேர்பட்ட நியாயமான பிரச்னைகளிலே ஏழை மக்கள் பக்கம்தான் நாங்கள் இருப்போம். நீங்கள் என்ன மிரட்டினாலும் அதற்கு நாங்கள் பயப்படமாட்டோம். நகர அபிவிருத்தியைக் காட்டி, தொழில் அபிவிருத்தியைக் காட்டி ஏழை மக்களை விரட்டி அடிப்பதற்கு இடம் அளிக்கக்கூடாது. கடைசியில் பேசுவதற்கு சந்தர்ப்பம் இருப்பதை அமைச்சர்கள் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் இஷ்டம் போல் பேசலாம் என்று நினைக்கவேண்டாம். நியாயம் இல்லாமல், அக்கிரமமான கோரிக்கை எதையாவது நாங்கள் ஆதரித்திருக்கிற ஒரு சந்தர்ப்பத்தை மந்திரி அவர்கள் காட்டட்டும்! மாற்று இடம் கொடுக்காமல் ஹரிஜனங்களை நீங்கள் அப்புறப்படுத்தக் கூடாது.

திருச்சி நகரத்தில் ஒரு தர்மம் செய்தார்கள். அம்மையார் லூர்த்தம்மாள் சைமன் அவர்கள்தான் கல்நாட்டு விழா நடத்தினார்கள். அங்கே நகரசுத்தித் தொழிலாளர்கள் குடி இருக்கக்கூடிய குடிசைகளை பிரித்து எறிந்துவிட்டு மெடர்னிடி செண்டர் கட்டுகிறார்கள். திருச்சி நகரத்தில் மெடர்னிடி செண்டர் இல்லையா? அந்த இடத்தில் மெடர்னிடி செண்டர் இல்லை என்று யார் கவலைப்பட்டார்கள்? பக்கத்தில் ஒரு வைஸ்சேர்மன் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் $1\frac{1}{2}$ எக்கர் புறம்போக்கு நிலத்தை ரைஸ் மில்லைச் சுற்றி வளைத்து போட்டிருக்கிறார். அந்த இடத்தில் மெடர்னிடி செண்டர் இல்லை என்று யார் அழுதார்கள்? மெடர்னிடி செண்டர் கட்டுவதற்கு வேறு இடம் இல்லையா? 300 நகரசுத்தித் தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய குடிசைகளை பிரித்து எறிந்து அவர்களை அப்புறப்படுத்தி விட்டு அங்கே இப்படி சுயநலத்திற்காக மெடர்னிடி செண்டர் ஏற்படுத்த வேண்டுமா? அவர் பக்கத்தில் செக்கிலியர் குடியிருக்கலாமா? அவர் பெரிய செட்டியார்! இப்படி ஹரிஜனங்களை அப்புறப்படுத்துவதற்கு அரசாங்கம் உதவி செய்வதை கம்யூனிஸ்டு கட்சி பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. கட்சி அரசியலைக் காட்டி நீங்கள் எங்களை மிரட்டாதீர்கள் என்று நிதி அமைச்சருக்கும் சொல்லிக்கொள்ளுகிறேன். இம்மாதிரி எவ்வளவோ சந்தர்ப்பங்கள் திருச்சி, சேலம், மதுரை, கோவை போன்ற இடங்களில் நடந்ததை சுட்டிக்காட்ட முடியும்.

20th March 1961] [Sri M. Kalyanasundaram]

மதுரையில் இம்மாதிரி பிரச்னை இருக்கிறது. இஷ்டம் போல் ஹரிஜனங்களை, பிற்பட்ட மக்களை நகரத்திற்கு அப்பால் போகவேண்டுமென்று அப்புறப்படுத்துகிருர்கள். நகரத்தின் வளர்ச்சிக்கு தங்களுடைய உழைப்பைக் கொடுக்கக் கூடியவர்கள், ரத்தத்தை சிந்தக்கூடியவர்கள், வியர்வையை சிந்தக்கூடியவர்கள் அவர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் நகரத்தின் மத்தியில் குடியிருக்கக்கூடாது, நகரத்திற்கு அப்பால் போகவேண்டும், கொள்ளை லாபம் அடிப்பவர்கள் தான் நகரத்தின் மத்தியில் வாழவேண்டுமென்று சொன்னுல், அதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்பதை அமைச்சர் அவர்களுக்கும், அரசாங்கத்திற்கும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். குடியிருப்பு மனைகளுக்காக நிலம் வாங்குவதிலே உழைக்கக்கூடிய மக்களுக்கு முக்கிய இடம் இருக்கவேண்டும். கொள்ளை லாபம் அடிப்பவர்களுக்கு அதில் இடம் இருக்கக்கூடாது. லீ பஸாரில் வியாபாரிகள் என்ன தர்மம் செய்கிருர்கள் ? முனிசிபல் வருமானத்தை அவர்கள் சாப்பிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிருர்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுப்பது தடுக்கப்படவேண்டும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அதேபோன்று கிராமப்புறங்களில் ஹரிஜன மக்கள் சேரி எங்கே இருக்கிறதோ, பக்கத்து நிலம் யாருடையதாயிருந்தாலும் சரி, அதை வாங்கிக் கொடுக்க வேண்டும். அந்த நிலம் செல்வாக்கு உடையவர்களுடைய நிலமாயிருந்தால், அதை வாங்குவதில்லை. விலை கொஞ்சம் உயர்வாக இருந்தால் கூட வாங்கிக்கொடுக்கவேண்டும். ஏழை, எளியவர்களுடைய நிலமாயிருந்தால் அதை ஆர்ஜிதம் செய்வதற்கு உடனே நோட்டீஸ் கொடுத்து விடுகிருர்கள். செல்வாக்கு உடையவர்கள் அல்லது பணக்காரர்கள் நிலத்தை வாங்க வேண்டுமென்ருல், அதை வாங்கிக் கொடுப்பதில்லை. அவர்களுக்கு நடைபாதை மற்ற வசதிகளுக்கு அதிக விலை கொடுத்தாவது நிலம் வாங்கித் தர வேண்டும். கிராமப்புறங்களில் ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு வசதி, ரோடு வசதி, சுடுகாடு வசதி போன்ற வசதிகள் செய்து கொடுப்பதற்கு வேண்டிய நிலத்தை அவர்கள் எந்த இடத்தில் இருக்கிருர்களோ அந்த இடத்தில் வாங்கிக்கொடுக்கவேண்டும். அதிக விலையாக இருந்தால் கூட பார்க்கக்கூடாது.

உதாரணமாக, திருச்சியில் தில்லை நகர் கூட்டுறவு சொஸைடிக்கு நல்ல நஞ்சை நிலத்தை, வளமுள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுத்திருக்கிருர்கள். அங்கே மூன்று சேரிகள் இருக்கின்றன. 11-வது வார்டில் ஒரு சேரியும், 6-வது வார்டில் இரண்டு சேரிகளும் இருக்கின்றன. அதைச் சுற்றி வீடுகள் கட்ட ஏற்பாடு செய்திருக்கிருர்கள். ஹரிஜனங்களை அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்தக்கூடாது. 800 வீடுகளுக்கு அதிகமாக அங்கே இருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கத்திற்கு தெரிவித்து 22 ஏக்கர் நிலத்தை அதற்காக ஒதுக்கிவைக்கவேண்டும் என்று சொல்லியும் கூட, விலை உயர்ந்திருக்கிறது என்று கூறுகிருர்கள். அப்படி விலை உயர்ந்திருந்தால் அதை ஹரிஜனங்களுக்கு மட்டும் வாங்கிக்கொடுக்கக்கூடாது, வீடுகட்டுகிற கூட்டுறவு சொஸைடிக்கு வாங்கிக்கொடுக்கலாம் என்ற கொள்கை தவறு. ஹரிஜனங்கள் அங்கிருந்து 10 மைலுக்கு அப்பால் போகவேண்டும், குடியிருக்க வசதியில்லாத ஏழை ஹரிஜனங்களுக்கு வாங்கிக்கொடுக்கக் கூடாது, கூட்டுறவு சொஸைடிக்கு வாங்கிக்கொடுக்கலாம் என்ற கொள்கையை அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த அளவுக்கு தகுந்த உத்திரவை ரெவின்யூ இலாகா பிறப்பிக்கவேண்டும். உடனடியாக இந்தப் பிரச்னையைக் குறித்து முடிவு எடுக்கவேண்டுமே தவிர, குருட்டுத்தனமான உத்திரவுகளைப் போட்டதிஞல் தான், விலை உயர்ந்த நிலமாக இருந்தால் ஹரிஜனங்களுக்கு வாங்கிக்கொடுக்கக்கூடாது என்று உத்திரவு போட்டதிஞல் தான் இப்பேர்ப்பட்ட கஷ்டங்கள் ஏற்பட்டன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். திருத்தங்களையெல்லாம் ஒன்று சேர்த்து, விதிகளும் சட்டமும் அடங்கிய ஒரு புஸ்தகத்தை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **THE HON. SRI M. A. MANICKAVELU** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதா திடீரென்று கொண்டுவரப்படவில்லை. இந்தப் பிரச்னை 1957-ல் " ஹவுஸிங் மினிஸ்டர்ஸ் கான்பெரன்ஸின் " போது பிரஸ்தாபிக்கப்பட்டது. பிற்பாடு 1959-ல் எல்லா மாகாண மந்திரிகளும் கலந்து ஆலோசனை செய்து, இம்மாதிரியான ஒரு மசோதா அவசியம் என்று கருதி, அந்த அடிப்படையில் தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னை ஒரு சிறிய பிரச்னை. முன்பு காம்பென்ஸேஷன் எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டதோ, அது அவ்வளவு உகந்ததாக இல்லை. இம்மாதிரி நகரங்களிலும், நகரங்களின் சுற்றுப் புறங்களிலும் " ஹவுஸிங் ஸ்கீம்களுக்கு " நிலம் ஆர்ஜிதம் செய்யும் பொழுது அந்த அடிப்படையிலே காம்பென்ஸேஷன் கொடுப்பது அவ்வளவு சாத்தியம் இல்லாமல் இருக்கிறது. " ஸ்லம் கிளியரன்ஸ் " ரொம்பவும் அவசியம். நகரங்களிலே, அதற்காக " காம்பென்ஸேஷன் ", அடிப்படையை மாற்றி வைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றி அமைப்பதில், ஏதோ " டிராஸ்டிக் " என்ற முறையில் ஒன்றும் விபரீதமாகச் செய்யவில்லை. எந்த அளவுக்கு நியாயமாகக் கொடுக்கவேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுக்கிறோம். " மார்கெட் வால்யூ " என்று சொல்லியிருக்கிறோம். இல்லாதுபோனால், " **Five years' average** " என்று சொல்லியிருக்கிறோம். அதோடு முன்பெல்லாம் " ஸொலேஷியம் " 15 சத வீதம் ஆக இருந்தது. ஸொலேஷியமே வேண்டியதில்லை என்று கூட ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. இருந்தாலும் கொஞ்சம் இருக்கட்டும் என்று அதை 5 சத வீதமாக மாற்றியிருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கனம் கலியாணசுந்திரம் அவர்கள் சொன்னார்கள், ஹரிஜனங்களுக்கு விலை உயர்ந்த நிலமாக இருந்தாலும் அல்லது " கல்டிவபிள் " லாண்டாக இருந்தாலும் அதை வாங்கிக் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். அவர்கள் கோருகிற மாதிரி கொடுக்கவில்லை என்றால் அதற்கு முக்கிய காரணம் இரண்டு இருக்கிறது. முதலாவதாக, மக்கள் அவர்கள் எங்கே இருந்தார்களோ அங்கேயே தான் வசிக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஹரிஜனங்கள் மாத்திரம் அல்ல, மற்றவர்களும் கூட. அதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. நஞ்சை நிலத்திற்கு பக்கத்தில் இருந்தால், " ஹெல்த் பாயிண்டில் " பார்க்கும்பொழுது அது சரியாக இல்லை. சுகாதார முறையில் வாழ்வதற்கு அது சாதகமாயில்லை. மேலும் நல்ல சாகுபடி நிலத்தை எடுத்துக்கொண்டால் உணவு உற்பத்தியை பாதிக்கும். கூடுமான வரையில் உணவு உற்பத்தி செய்யக்கூடிய நிலத்தை எடுத்துக் கொள்வதை எவ்வளவு தூரம் தவிர்க்க முடியுமோ அவ்வளவு தூரம் தவிர்க்கவேண்டுமென்ற அடிப்படையில் தான் சில சந்தர்ப்பங்களில் " கல்டிவபிள் லாண்டாக ", நஞ்சை நிலமாக இருந்தால் எடுப்பதில்லை.

SRI M. KALYANASUNDARAM : தில்லை நகரத்தில் கோவாப்ரேடிவ் சொஸைடிக்கு கொடுத்த நிலம் பூராவும் நஞ்சை நிலம்தான்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒரு பர்லாங்கு, இரண்டு பர்லாங்கு தூரத்தில் வேறு மேடான நிலம் இருந்தால் அதை எடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் தான் எடுக்கிறோம். தில்லை நகர சமாசாரம் பல வருஷங்கள் ஆகிவிட்டன. அதிலே " பாலிடிக்ஸ் " இருந்ததோ, இல்லையோ எனக்குத் தெரியாது. இப்பொழுது அது மேட்டுப் பாங்கான நிலம் தான். ஒருக்கால் முன்பு நஞ்சை நிலமாக இருந்தாலும் இருந்திருக்கலாம். அது பழைய சமாசாரம். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் : நான் அந்த ஊரில் பிறந்தவன்) இருக்கட்டும். பிறகு, லீ பஸார் பற்றிச் சொன்னார்கள். அதுவும் பழைய சமாசாரந்தான். 20, 30 வருஷங்களுக்கு முன்னால், கலெக்டர் காலத்திலே அப்படிச் செய்யப்பட்டிருக்கும். அது கவர்ன்மெண்ட் நிலம் என்று தான் நினைக்கிறேன். அப்பொழுது இருந்த நிலைமைப் பிரகாரம், அவர்களே வேர்ஹௌஸ் கட்டுவார்கள் என்ற அடிப்படையில் செய்தது. அது இப்பொழுது புது முறையிலே செய்ய வில்லை. அது பழைய ஏற்பாட்டின்

10-30 a.m.

29th March 1961] [Sri M. A. Manickavelu]

பிரகாரம் ஏற்பட்டது. இத்தனை வருஷத்திற்குள்ளே கட்ட வேண்டும் என்று வைத்திருந்தார்கள் ; இரும்பு போன்ற சாமான்கள் கிடைக்காததால், உடனே செய்யப்படவில்லை. அது ஒரு அலாதியான விஷயம்.

மற்றபடி சில கஷ்டங்கள் பற்றிச் சொன்னார்கள். இம்ப்ளிமெண்டேஷன் ஆப் தி ஆக்டிலே சில சந்தர்ப்பங்களிலே கஷ்டங்கள் ஏற்படுகின்றன. வாஸ்தவம். தனித்தனிக் கஷ்டங்களுக்கு தனித்தனிப் பரிகாரம் தேட வேண்டும். ஆனால், பேஸிக்காக இருப்பதை நிர்ணயிக்கும் போது, விரைவில் செய்ய வேண்டும் என்று செய்யப்படுகிறது.

இந்த சமயத்திலே திரு. கல்யாணசுந்தரம் சவால் விடும் முறையிலே, ஏதோ எப்போதோ சொன்னதற்கு, என் பேரில் சவால் விட்டால் (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் : அப்படியானால், ஜாயிண்ட் ரெஸ்பான்ஸி-பிலிடி இல்லையா ?) அப்படிப் பேசினதற்கு சவாலுக்கு இதிலே இடம் இல்லை. (சிரிப்பு). பொதுவாகப் பிரச்னை என்னவென்றால், அடிப் படையை மாற்ற வேண்டும். தனிப்பட்ட முறையிலே கோளாறுகள், குறை பாடுகள் ஏற்பட்டால், அது வேறு விஷயம். தனித்தனிக் குறைபாடுகளுக்கு, அந்தந்த சமயத்தில் பரிகாரம் தேடவேண்டும். இங்கே நான் பதில் கொடுக்க முடியாது. என் பிரச்சினை சின்னது, ஸிம்பிள் பிரச்சினை. காம்பன்ஸேஷன் அடிப்படையை மாற்ற வேண்டும் என்பது. கூடுமான வரையில், "**Market value or the average**" என்று சொல்லு கிறோம். கனம் அங்கத்தினர்களுக்கு நினைவு இருக்கலாம், பொறுக்குக் கமிட்டியில் கூட, ஸிடி டெனண்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்டில் கூட ஆவரேஜ் என்று போட்டுக் கொடுத்திருக்கிறோம், புதிய முறையில். ஆகையினால் இந்தத் திருத்தத்தை சபை அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன். கஷ்டம் என்னவெனில், நோடிபிகேஷன் பண்ணும் சமயத்தில் நிலத்திற்கு மதிப்பு இருப்பதை விட, இனி மேல் பிற்பாடு உயரலாம். ஆதலால், '**on the date of notification and to what use the land is put**' என்று, இனிமேல் வேறு உபயோகத்திற்கு வந்தால் அந்த அடிப் படையில் போட்டால் சரி அல்ல. இதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Land Acquisition (Madras Amendment) Bill, 1961 (L.A. Bill No. 11 of 1961) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 3.

DEPUTY SPEAKER : The motion is—

"That clause 3 do stand part of the Bill."

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move the following amendment :—

For sub-clause (1), *substitute* the following :

(1) in Section 23 of the said Act—

(*a*) in sub-section (1)—

(i) *for clause first*, the following clause shall be *substituted*, namely :—

"first, the market value of the land at the date of the publication of the notification under section 4, sub-section (1), or an amount equal to the average market value of the land during the five years immediately preceding such date, whichever is less;"-

(ii) in clause *fifthly*, the word 'and' occurring at the end shall be omitted ;

(iii) in clause *sixthly*, the word 'and' shall be added at the end; and

(iv) after clause *sixthly*, the following clause shall be added, namely :—

"*seventhly*, the use to which the land was put at the date of the publication of the notification under section 4, sub-section (1)";

(*b*) in sub-section (2), *for* the words "fifteen per centum", the words "five per centum" shall be *substituted*.

The object of these amendment is to recast the Clause and provide for five per centum solatium.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

'In sub-clause (1) (i), in the proposed amendment to clause *first*, for the words "the publication of the notification under section (4), sub-section (1)", the words "the commencement of this Act" shall be *substituted*.'

SRI T. IRUSAPPAN : Sir, I second the amendment.

DEPUTY SPEAKER : Now the clause and the amendments are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் திருத்தம் முக்கியமானது. மசோதாவின் நோக்கமே, தொழிற்சாலைகள் அதிகமாக வளர்ந்து வருவதால், மனைக்கட்டுகள் விலையைக் கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்பது. மசோதாவில், நோடிபிகேஷன் கொடுத்த நாளில் உள்ள மார்கெட் வால்யூ, அல்லது அதற்கு ஐந்து வருஷங்களுக்கு முன்னால் இருந்த ஆவரேஜ் வால்யூ, இவற்றில் குறைவாக இருப்பது எதுவோ என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் மார்கெட் வால்யூவை விட ஐந்து வருஷம் கழித்து நோடிபிகேஷன் கொடுத்து, ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றால், விலை அதிகமாகிவிடும். அதற்கு என் திருத்தம் தான் சரியாக இருக்கும். சட்டம் என்றைக்கு அமுலுக்கு வருகிறதோ, அந்த நாளில் இருக்கும் மார்கெட் வால்யூ என்று சொல்லுகிறேன். என் நோக்கம், அந்த நிலத்திற்கு ஒரு பிக்ஸெட் வால்யூ இருக்க வேண்டும் என்பது. அப்படி ஏற்படுத்தினால் தான் மேற்கொண்டு விலை ஏறாமல் இருக்கும். அமைச்சர் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால், அது மசோதாவின் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸ் நிறைவேறுது. எப்பொழுதுமே எந்த திருத்தத்தையுமே ஏற்றுக் கொண்டது கிடையாது. அப்படியே நிறைவேறி விடுகிறது. இந்த ஒரு திருத்தத்தையாவது ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

* SRI V. SANKARAN : ஸார், கனம் அங்கத்தினர் அண்ணாமலையின் திருத்தத்தை ஆட்சேபிக்கிறேன். நிலத்தின் விலையை மாத்திரம் கட்டுப் படுத்த வேண்டும் என்று சொல்வது நியாயமாகாது. மற்ற பொருள்களின் விலையையும் கட்டுப் படுத்துவதானால் இதையும் கட்டுப்படுத்துவது சரி. அப்படிச் செய்யாதவரை, இதை மாத்திரம் கட்டுப் படுத்துவது சரியாகாது.

29th March 1961] [Sri V. Sankaran]

மற்ற மூவபிள், இம்மூவபிள் ப்ராபர்டிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மற்ற விவகாரங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதையும் அப்படியோ விடவேண்டியதுதான் கடவுள் சாபம் பெற்றது போல் இது என்றும் இருக்கும்.

* **THE HON. SRI M. A. MANICKAVELU** : ஸார், கனம் அங்கத்தினர் அண்ணாமலை சொன்னார், இதற்கு முன்னே எந்த திருத்தத்தையும் ஒத்துக் கொள்ளவில்லை, இந்த திருத்தத்தையாவது ஒத்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில். அதனால், திருத்தம் சரியான முறையில் நியாயமான முறையில், ஒத்துக்கொள்ளக்கூடிய திருத்தமாக கொடுத்தால், ஒத்துகொள்ளலாம். அவர் கூறுவது, இந்த ஆக்ட் என்றைக்கு அமுலுக்கு வருகிறதோ, அன்றைக்கு இருக்கும் விலை என்று. அது "பிரீஸிங்" என்கிறார்களே, அது மாதிரி இருக்க வேண்டும் என்கிறார்கள். நோடிபிகேஷன் டேட்டில் என்று நான் சொல்லுகிறேன். 4, 5, வருஷத்திற்குப் பிறகு, இன்றைக்கு 60-ம் வருஷத்திய விலையே இருக்க வேண்டும் என்பது நியாயம் இல்லை. கோர்டிலே கூட, சாலஞ்ஜ் பண்ணுகிறார்கள், அல்ட்ரா வைரிஸ் என்று. மேலும் அது நியாயம் கூட இல்லை. கொஞ்சம் ஓரளவுக்கு விலையைக் குறைக்கலாமே தவிர, சட்டம் கையில் இருக்கிறது என்று எப்படி வேண்டுமானாலும் செய்வது சரியாகாது. அவர் திருத்தத்தை ஒத்துக் கொள்வதற்கில்லை.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri Annamalai, pressing his amendment?

SRI S. M. ANNAMALAI : Yes, Sir, I am pressing it.

DEPUTY SPEAKER : The question is—

'In sub-clause (1) (i), in the proposed amendment to clause *first*, *for* the words "the publication of the notification under section (4), sub-section (1)", the words "the commencement of this Act" shall be *substituted*.'

The amendment was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

For sub-clause (1), *substitute* the following :—

(1) in section 23 of the said Act—

(*a*) in sub-section (1)—

(i) *for* clause *first*, the following clause shall be *substituted*, namely :—

"first, the market value of the land at the date of the publication of the notification under section 4, sub-section (1), or an amount equal to the average market value of the land during the five years immediately preceding such date, whichever is less";

(ii) in clause *fifthly*, the word 'and' occurring at the end shall be omitted;

(iii) in clause *sixthly*, the word 'and' shall be added at the end; and

[Deputy Speaker] [29th March 1961

(iv) after clause *sixthly*, the following clause shall be added, namely :—

" *seventhly*, the use to which the land was put at the date of publication of the notification under section 4, sub-section (1)";

(*b*) in sub-section (2), *for* the words " fifteen per centum ", the words " five per centum " shall be *substituted*.

The amendment was put and carried.

Clause 3, as amended, was put and carried.

Clauses 4 and 5 were put and carried.

Clause 1 and the preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

" That the Land Acquisition (Madras Amendment) Bill, 1961 (L.A. Bill No. 11 of 1961) as amended be passed."

DEPUTY SPEAKER : The question is—

" That the Land Acquisition (Madras Amendment) Bill, 1961 (L.A. Bill No. 11 of 1961) as amended be passed."

The motion was put and carried and the Bill as amended was passed.

(5) THE INDIAN STAMP (MADRAS AMENDMENT) BILL, 1961 (L.A. BILL NO. 14 OF 1961).

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

" That the Indian Stamp (Madras Amendment) Bill, 1961 (L.A. Bill No. 14 of 1961) be taken into consideration."[a]

By the Indian Stamp (Amendment) Act 1955 (Central Act 43 of 1955), which came into force on 1st April 1956, the rate of stamp duty on instruments relating to transfer of shares in an incorporated Company or other body corporate has been reduced to a rate of 12 annas (75 nP.) for every hundred rupees or part thereof of the value of the shares and this rate is uniform throughout India. The instrument relating to transfer of debentures and those relating to transfer of debenture stocks are similar to those relating to transfer of shares. They are however chargeable in this State with *ad valorem* stamp duty equal to one half of the duty payable on a conveyance equal to the face amount of the debenture. The Government of India have stated that it has been pointed out to them that investors buy debentures on considerations of interest yield in the same manner as they buy Government securities, that a relatively heavy stamp duty is a powerful deterrent to the ready negotiability of debentures, that most of the debentures are in the

[a] Published in the *Fort St. George Gazette*, dated 10th March 1961.

registered form and that the stamp duty payable on their transfer imposes a heavy burden on investors and seriously restricts free negotiability. They consider that at a time when it is sought to bring about uniformity in trading practices observed on Stock Exchange in the country, it is not only desirable but necessary that duties on all the instruments of the nature mentioned above should as far as possible be identical and uniform throughout the country. It is accordingly desirable that the duty on instruments relating to transfer of debentures and transfer of debenture stocks should also be reduced and fixed at the rate prescribed for transfer of shares.

The quantum of loss of revenue per annum that may result on account of the reduction of stamp duty on transfer of debentures cannot be assessed now.

The Bill does not involve expenditure from the Consolidated Fund of the State; therefore no Financial Memorandum is necessary under Rule 89 of the Madras Assembly Rules. No Memorandum regarding delegated legislation is necessary under Rule 90 of the said Rules as the Bill does not involve delegation of the legislative powers.

I request the House, Sir, to accept the motion.

இது வருமானத்தைக் குறைத்துக்கொள்கிற சட்டம். இது மாதிரி சட்டம் கொண்டு வரப்படுவதே இல்லை. இப்போது என் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்கிறேன். ஷேர்களை எல்லாம் மாற்றுவதற்கு ஒரு ரேட் இருக்கிறது. நூற்றுக்கு முக்கால் ரூபாய் என்று இருக்கிறது. டிபென்சருக்கு விற்பனை ரேட்டில் பாதி என்று இருக்கிறது. டிபென்சர் என்றாலும் ஒருத்தர் இன்னொருத்தருக்கு மாற்றுவது—அடமான முறையில். ஷேர்களை எப்படி மாற்றுகிறார்களோ அப்படி டிபென்சர்களைக் கூட மாற்றுவதற்கு ஒரே ரேட்டாக நூற்றுக்கு முக்கால் ரூபாய் என்கிறபடி இருந்தால் நல்லது என்பதுதான் கருத்து. இதிலே அபிப்பிராய பேதம் இருக்காது என்று நினைக்கிறேன். இதைச் சபை அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Indian Stamp (Madras Amendment) Bill, 1961 (L.A. Bill No. 14 of 1961) be taken into consideration."

SRI V. K. RAMASWAMI MUDALIYAR : Sir, I may say that Government have at last chosen to bring about a reduction in tax. Probably this is the first time they have done so in the annals of the present Government. There is nothing for me to say except to welcome this Bill.

DEPUTY SPEAKER : The question is :

"That the Indian Stamp (Madras Amendment) Bill, 1961 (L.A. Bill No. 14 of 1961) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move :

"That the Indian Stamp (Madras Amendment) Bill, 1961 (L.A. Bill No. 14 of 1961) be passed."

DEPUTY SPEAKER : The question is :—

"That the Indian Stamp (Madras Amendment) Bill, 1961 (L.A. Bill No. 14 of 1961) be passed."

The motion was put and carried and the Bill was passed.

10-45 a.m. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders.

Nil.

B.—Reports, Notifications and other papers.

137. *The Madras Appropriation (No. 3) Bill*, 1961 (*L.A. Bill No*. 20 *of* 1961).

APPENDIX I.

[Vide answer to starred question No. 1152 asked by Sri A. A. Rasheed (on behalf of Sri A. Govindasami) at the meeting of the Legislative Assembly held on 29th March 1961, page 341 supra.]

The number of temporary posts in the Survey and Land Records Department are as follows :—

Serial number and category. (1)		Total number of employees. (2)
1	Assistant Directors of Survey and Land Records	8
2	Inspectors of Survey and Land Records ..	20
3	District Surveyors	44
4	Deputy Surveyors	306
5	Field Surveyors	805
6	Superintendents	9
7	Head Draftsmen	9
8	Head Computors	12
9	Junior Draftsmen	941
10	Upper Division Clerks	26
11	Lower Division Clerks	172
12	Typists	18
13	Peons	215
14	Jeep Drivers	5
15	Senior Draftsmen	9
16	Senior Computor	1
17	Compositors	9
18	Technical Assistant	1
19	Reproduction Personnel	15
20	Steno-typist	1

APPENDIX II.

[Vide answer to starred question No. 1155 asked by Sri M Kalyanasundaram at the meeting of the Legislative Assembly held on 29th March 1961, page 345 supra.]

A.—The following are the details of the scheme for relief of indebtedness of weavers in the State included in the programme for Third Plan and in 1961–62 :—

It is estimated that the average indebtedness of weavers will be about Rs. 150 per weaver. A beginning will be made to advance up to this amount as loan to 10 per cent of the new entrants within the co-operative fold and for those who are already members of the co-operative societies in order to enable them to

[29th March 1961

repay their dues to the master weavers. The loan will be issued only to those members who are loyal to the societies and whose record of work for the society is good. The scheme if approved by the All-India Handloom Board will be tried in selected centres. A sum of Rs. 2.5 lakhs is proposed to be provided to implement this scheme in the Third Five-Year Plan as shown below:—

	RS.
1961–62	50,000
1962–63	50,000
1963–64	50,000
1964–65	50,000
1965–66	50,000
Total ..	2,50,000

It is proposed to give loans to about 1,750 members during the Third Five-Year Plan at the rate of not exceeding Rs. 150 per member and during the first year of the Third Five-Year Plan viz. 1961–62, about 350 weavers will be benefited by this scheme.

APPENDIX III.

[Vide answer to starred question No. 1156 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 29th March 1961, page 345 supra.]

Particulars of orchards in this State during the year **1957–58** *with their acreages both variety-wise and district-wise.*

District.	*Bananas.*	*Citrus fruits.*	*Mango.*	*Other fresh fruits.*	*Total best fruits.*
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	ACS.	ACS.	ACS.	ACS.	ACS.
1 Chingleput ..	1,350	85	3,763	1,857	7,055
2 South Arcot ..	1,851	52	3,083	153	5,139
3 North Arcot ..	3,112	1,173	10,458	5	14,748
4 Salem	5,110	2,197	11,873	886	20,066
5 Coimbatore ..	5,488	188	541	362	6,579
6 Tiruchirappalli ..	11,901	539	3,280	3	15,723
7 Thanjavur ..	10,015	2,653	4,113	10,143	29,924
8 Madurai	21,878	1,627	7,100	6,873	37,478
9 Ramanathapuram .	2,334	196	1,179	1,256	4,965
10 Tirunelveli ..	8,115	2,128	4,672	2,004	16,919
11 Nilgiris	1,020	913	..	159	2,092
12 Kanyakumari ..	2,513	..	11,300	273	14,086
Total ..	74,687	11,751	61,362	23,974	171,774

29th March 1961]

APPENDIX IV.

[Vide answer to starred question No. 1157 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 29th March 1961, page 347 supra.]

Statement showing the particulars of illicit import of goods from foreign countries, viz., number of cases registered, details of goods seized and their value during 1960.

Serial number and name of district.	*Number of cases registered in* 1960.	*Particulars of goods seized.*	*Value.* RS.
(1)	(2)	(3)	(4)
1 Madurai Urban	1	Japanese Nippon camphor ..	50,000
2 Deputy Inspector-General of Police, C.I.D. (Prohibition Intelligence Bureau.)	6	9 Swiss-made wrist watches	2,000
		594 Japanese Pilot pens ..	5,000
		22 dozens fountain pens (foreign) ..	500
		1,660 Japanese-make Pilot pens ..	13,000
		3 Alaram time-pieces (Chinese) ..	75
		4 Wrist watches and 2 watch chains.	500
3 Salem	1	Japanese Nippon camphor ..	1,68,300
		9 bags of three stars Japanese made and Polyester buttons.	43,600
		8 bags of England-made press buttons.	22,912
		500-1 oz. bottle liquid bright gold (made in England).	30,000
		3,588 Pilot Japanese-made pens ..	26,910
		17 pieces of silk—Dyed Rayon palace crepe.	2,550
4 Thanjavur	4	7 cases of Japanese camphor ..	5,000
		6 bags of cloves	11,200
		12 bags of cloves	13,440
		1,624 wrist watches	1,46,040
5 Commissioner of Police, Madras.	24	Cigarette cases—3	15
		Cigar lights—287	15,220
		Stationery Articles.	
		Fountain pens—200	5,000
		Elastic reads—120	12,000
		Safety blades—65 packets containing 100 blades each.	500
		Razor sets—1	5
		Wrist watches—55	8,500
		Time piece—1	25
		Wall clock—1	100
		German buckles—25 packets ..	300
		Radios—4	1,400
		Cameras—3	700
		Talcum powder—27 bottles	135
		Lipstics—12 bottles	36
		Playing cards—9 packets containing 12 packs.	54
		Nail cutters—16	40
		Hair oil—6 bottles	104
		Soaps—26	52
		Foreign cigarettes—29 packets ..	77
		Trunk box—1	25
		Gold ingots—9 (wg. 240 varegans) ..	6,000
		Foreign liquor—2 bottles	130
		Clothes 6 yds. sarees—4	50
		Sovereigns—7	630
		Camphor—60 boxes	60,000
Total..	36		6,52,125

[29th March 1961

APPENDIX V.

[Vide answer to starred question No. 1169 asked by Sri N. R. Thiagarajan at the meeting of the Legislative Assembly held on 29th March 1961, page 359 supra.]

List of Hindu and Jain Charitable institutions and endowments brought within the purview of the Hindu Religious and Charitable Endowments Act, 1959.

Serial number. (1)	Name of the Institution. (2)
	Tanjore district.
1	Sri Chokkalingam Pillai Endowment, Vadamattam, Nannilam taluk, Tanjore district.
2	Nataraja Pillai Endowment, Melagalangar, Mayuram taluk, Tanjore district.
3	Kathan Chettiar Chatram Endowments, Tiruthuraipoondi town and taluk, Tanjore district.
4	Karvendinathapuram Anna Chatram, Thalayudayarkoilpattu, Mayuram taluk, Tanjore district.
5	Dharma Chatram, Illuppur, Mayuram taluk, Tanjore district.
6	Sri Venkatachalapathy Choultry, Karunthattankudy, Tanjore district.
7	Annachatram at Tiruvathevan, Pattukkottai taluk, Tanjore district.
8	Thiruvasal Thanneer Pandal, Ramanathankoil, Mannargudi taluk, Tanjore district.
9	Sethubava Anna Chatram at Mannargudi town and at Sethubavachatram, Pattukkottai taluk, Tanjore district.
10	A. S. Sabapathy Chettiar and A. S. Kanagasabai Chettiar Annadhanachatram, Kumbakonam, Tanjore district.
11	Annadana Chatram, Athur, Melakalakudi, Papanasam taluk, Tanjore district.
12	Amavasai kattalai charities, Palliagraharam, Tanjore taluk and district.
13	Marimuthupillai Charities, Kandavikrayam, Mannargudi taluk, Tanjore district.
14	Karaikottai Water Pandal Charities, Karaikottai, Mannargudi taluk, Tanjore district.
15	Waterpandal Charity, Pazhamaneri, Tanjore taluk and district.
16	Sri Sultanjiappa Chatram, Aladikumalai, Pattukkottai taluk, Tanjore district.
17	H. H. M. Ahayalambalampuram Choultry, Palliagraharam, Tanjore taluk and district.

29th March 1961]

Tanjore district—cont.

18 Vastad Chavady, Vilarvattam, Tanjore taluk and district.

19 Subbarayalu Mudaliar Charities, Pattukkottai town and taluk, Tanjore district.

20 Endowments created by Raja Sri Kesava Rao Moheday Rao by his will, dated 10th March 1868, Tanjore town, taluk and district.

21 Annappoorani Amman Chatram, Dharmam, etc., Mettupalayam village, Tiruturaipoondi taluk, Tanjore district.

22 Odacheri Chatram and water pandal charity, Odacheri, Tiruthuraipoondi taluk, Tanjore district.

23 Karuppur village, Sri Venkatachalapathy Dharma Chatram.

North Arcot district.

24 Dharmadalayam Inam, S. No. 31, Arumbarthi village, Cheyyar taluk, North Arcot district.

25 Charities situated in S. No. 139-1, Mangal village, Cheyyar taluk, North Arcot district.

26 Chinny Ramaswamy Reddy's charities, Vellore town and taluk, North Arcot district.

27 Choultries at Velam village, Wallajah taluk, North Arcot district.

28 Reddy choultry, Katpadi Road, Vellore town and taluk, North Arcot district.

29 Choultry in Vengumam village, Wandiwash taluk, North Arcot district.

30 Vaithyam Subramanya Iyer Charities, Kemparajapuram, Gudiyatham taluk, North Arcot district.

31 Charities created by Sri Somasundara Mudaliar, Tiruvettipuram, Cheyyar taluk, North Arcot district.

32 Kannadiyar (Lingayat) Madom, Napier Street, Amburpet, Vaniyambadi town, Tiruppattur taluk, North Arcot district.

33 Sri Viswabramin Choultry, Tiruvannamalai town and taluk, North Arcot district.

34 Sri Chinni Amrithavalli Thayarammal Endowments, Sri Kannikaparameswarai Koil Street, Vellore town and taluk.

35 Sri Kullakanda Ekambaram Chetty Choultry, Vaniyambadi, Tiruppattur taluk, North Arcot district.

36 Choultry known as Kalchatram, Arni town and taluk, North Arcot district.

South Arcot district.

37 Sri Subramanya Chettiar Choultry, Vizhapallam, Cuddalore taluk, South Arcot district.

38 Sri Vaiyapuri Paradesi Annadana chatram, Nellikuppam, Cuddalore taluk, South Arcot district.

[29th March 1961

South Arcot district—cont.

39 Sri Cellayee Ammal Annadhana Trust, Thittagudy, Vriddhachalam taluk, South Arcot district.

40 Sri Vannia Vysya Community Endowments, Vizhapallam, Cuddalore taluk, South Arcot district.

41 Vaniya Chettiars Choultry, Railway Feeders Road, Chidambaram town and taluk, South Arcot district.

42 Rajagopal Pillai Choultry, Chidambaram, South Arcot district.

Madras City.

43 Ravanappa Mudaliar choultry, Saidapet, Madras.

44 Ganapathy Mudaliar chatram and Annakavadi Madam, Triplicane, Madras.

45 Nacharammal charity, Seven Wells, Madras.

46 Velur Kuppuswami Mudaliar charities, Washermanpet, Madras.

47 Sri Venkayala Kuppiah Chetty Vaisya Dharma chatram, 10, Varadamuthiappan Street, Georgetown, Madras.

Coimbatore district.

48 Chatram and Thannirpandal charities, Gomangalampudur, Pollachi taluk, Coimbatore district.

49 Charitable Endowments (Coimbatore) Endowment created by late Pechimuthu Rangaswamy Gownder, Coimbatore town and taluk.

50 Charitable Endowment created by N. Sundara Dikshithar in Kolinjivadi, Dharapuram taluk, Coimbatore district.

51 Thirupandal charity, Noochipalayam, Dharapuram taluk, Coimbatore district.

52 Srimathi Thirumoorthi Ammal and Sithammal Trust, Funds, Dhalavoipatnam, Dharapuram taluk, Coimbatore district.

Salem district.

53 Macdohold choultry, Vembadithalam, Salem taluk and district.

54 Appurajapuram choultry, Komarapalayam, Tiruchengode taluk, Salem district.

Chingleput district.

55 Veeraswamy water Pandal Charity, Tiruvanniyur, Saidapet taluk, Chingleput district.

56 Palayavoyal Dharma chatram, Palayavoyal, Saidapet taluk, Chingleput district.

29th March 1961]

Chingleput district—cont.

57 Pattasalai choultry, Tiruvottiyur, Saidapet taluk, Chingleput district.

58 Magoral Madam, Big Kancheepuram, Kancheepuram taluk, Chingleput district.

59 Sri Balchetty Chatram charities, Tiruppukuzhi, Kancheepuram taluk, Chingleput district.

Tiruchirappalli district.

60 Ponniah Pillai Annadhana chatram, Manankunram, Manapparai Firka, Kulitalai taluk, Tiruchirappalli district.

61 Vysias Chatram, Ariyalur, Udayarpalayam taluk, Tiruchirappalli district.

62 Vedapatasala, Tirumayam, Pudukkotai, Tiruchirappalli district.

63 Krishna Reddiar chatram, Kottathur, Musiri taluk, Tiruchirappalli district.

64 Lalgudi town chatram, Lalgudi town and taluk, Tiruchirappalli district.

65 Sri Ramachandra vilas charity, Keelarajaveedhi, Pudukottai, Tiruchirappalli district.

66 Umayalpuram chatram water pandal charity, Umayalpuram, Tiruchirappalli district.

67 Thannirpandalpalayam, hamlet of Manmangalam, Manmangalam Dharma chatram, originally known as "Rajagopal chetty chatram", Karur taluk.

68 Charitable Endowment known as Annadhana chatram, Thillainayagam Road, Tiruchirappalli town and taluk and district.

Tirunelveli district.

69 Diraviam Chettiar charities, Sevanthiapatti, Tirunelveli taluk and district.

70 Dwadasi Annadana kattalai charity, Tenkasi town and taluk, Tirunelveli district.

71 Annadhana chatram, Kadayanallur, Tenkasi taluk, Tirunelveli district.

72. Annadhana Chatram, Pappankulam, Ambasamudram taluk, Tirunelveli district.

73 Sri Agastier Asramam charity, Vickramasingapuram village, Ambasamudram taluk, Tirunelveli district.

74 Sri Thanganna Nadar charity, Poosanur village, Koilpatti taluk, Tirunelveli district.

[29th March 1961

Ramanathapuram district.

75 Sangili Naicker's choultry, Virudhunagar, Sattur taluk, Ramanathapuram district.

76 V. R. Chatram, Dhanushkodi, Ramanathapuram taluk and district.

77 Chatram at Madagupatty, Sivaganga, taluk. Ramanathapuram district.

78 Annadhana chatram. Kunnakudi, Tiruppattur taluk, Ramanathapuram district.

79 Annachatram, Kaliakoil village, Sivaganga taluk, Rama. nathapuram district.

Madurai district.
